6. புற்றுநோய் சிகிச்சைக்கென சிறப்பு விடுப்பு

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட அரசுப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தற்போது அனுமதிக்கப்பட்ட விடுப்புகளுடன், கீமோதெரபி (Chemo–therapy) மற்றும் ரேடியோதெரபி (Radio–therapy) சிகிச்சை பெறும் ஒவ்வொரு முறையும், அவர்களுக்கு முழு ஊதியத்துடன் 10 நாட்கள் சிறப்பு விடுப்பு வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நான் அளித்த பதிலுரையை ஏற்றிருப்பார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மீன் வளத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்கு குஜராத்திலிருந்து துளை போடுவதற்கு இயந்திரம் வந்திருப்பது குறித்து—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் குஜராத்திலிருந்து துளை போடுவதற்கு இயந்திரம் வந்திருப்பது குறித்து காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. இராமசாமி அவர்கள் காலையில் ஒரு கேள்வி எழுப்பினார். அது பற்றிய முழு விவரத்தை சபைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.*

சிவகங்கை மாவட்டத்தில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் அருகில் மிகப் பெரிய ஆழ்துளைக் கிணறு போடுவதற்காக ஓர் இயந்திரம் வந்திருப்பதாகவும், அங்கே ஹைட்ரோ–கார்பன் திட்டம் நிறைவேற்றப்படுவதாகவும் ஒரு வதந்தி இருப்பதாகத் தெரிவித்தார்கள். அப்படி ஏதும் இல்லை என்று சொன்னேன். விசாரித்ததில், அழகப்பா பல்கலைக்கழகத்தில் இருக்கிற

2019 ஜூலை 5] [திரு. சி.வி. சண்முகம்]

புவியியல் துறையின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய அரசினுடைய நிலத்தடி நீர் வாரியம், அங்கேயே, அந்த அழகப்பா பல்கலைக்கழக வளாகத்துக்குள்ளேயே நிலத்தடி நீரை ஆராய்ச்சி செய்து, முழுமையாக அந்த நிலத்தடி நீரின் போக்கை அறிந்து, அதனை 3D வரைபடமாக எடுத்து, ஆராய்ச்சி செய்வதற்காக பல்கலைக்கழகத்தின் அனுமதியைப் பெற்று, பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், பதிவாளர், மாவட்ட காவல் துறை அதிகாரி, பொதுப் பணித் துறை, இன்னும் சொல்லப்போனால் காரைக்குடியிலிருக்கின்ற அரசு கல்லூரிகள் அனைத்தும் சேர்ந்து 2–7–19 அன்று கூட்டத்தைக் கூட்டி அந்தக் கூட்டத்திலேயே இது அறிவிக்கப்பட்டு, ஒப்புதலைப் பெற்று இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிலத்தடி நீரை ஆராய்வதற்கும், அந்தப் பல்கலைக்கழகத்திலிருக்கின்ற மாணவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காகவும் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 35 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை
(இ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)
(ஈ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், சொல்லுங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்பட்டினம்*